செ.வெ.எண்.491/2021 நாள்.29.10.2021

**திருப்பத்தூர் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.அமர்குஷ்வாஹா.இ.ஆ.ப, அவர்களின் ஆணையின்படி கடந்த 23.10.2021 அன்று நடைபெற்ற மாபெரும் கொரோனா தடுப்பூசி முகாம்களில் கலந்துகொண்டு தடுப்பூசி செலுத்திகொண்டவர்களில் கணினி குலுக்கல் முறையில் தேர்வு செய்யப்பட்டவர்களுக்கு முதல் பரிசாக எல்ஈடி டிவியும், இரண்டாம் பரிசாக மிக்ஸியும், மூன்றாம் பரிசாக கிரைண்டரையும் மற்றும் 3 நபர்களுக்கும் டிபன் கேரியர்களை மாவட்ட வருவாய் அலுவலர் திரு.என்சிஈ.தங்கையாபாண்டியன் அவர்கள் வழங்கினார்கள்.**

திருப்பத்தூர் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.அமர்குஷ்வாஹா.இ.ஆ.ப, அவர்களின் ஆணையின்படி கடந்த 23.10.2021 அன்று நடைபெற்ற மாபெரும் கொரோனா தடுப்பூசி முகாம்களில் கலந்துகொண்டு தடுப்பூசி செலுத்திகொண்டவர்களில் கணினி குலுக்கல் முறையில் தேர்வு செய்யப்பட்டவர்களுக்கு முதல் பரிசாக எல்ஈடி டிவியும், இரண்டாம் பரிசாக மிக்ஸியும், மூன்றாம் பரிசாக கிரைண்டர் என 3 நபர்களுக்கும் மற்றும் 3 நபர்களுக்கும் டிபன் கேரியர்களை மாவட்ட வருவாய் அலுவலர் திரு.என்சிஈ.தங்கையாபாண்டியன் அவர்கள் வழங்கினார்கள்.

திருப்பத்தூர் மாவட்டத்தில் கொரோனா தடுப்பூசி முகாம்களில் வருவாய்த்துறை, ஊரக வளர்ச்சித்துறை, சுகாதாரத்துறை, மருத்துவத்துறை, காவல் துறை உள்ளிட்ட பல்வேறு துறைகள் ஒருங்கிணைந்து பணிபுரிந்தவர்களுக்கு நன்றிகளை மாவட்ட வருவாய் அலுவலர் தெரிவித்தார்கள்.

திருப்பத்தூர் மாவட்டம் மாதனூர் ஊராட்சி ஒன்றியம், அழிஞ்சிகுப்பம் கிராமத்தை சேர்ந்த திரு.லோகநாதன் (வயது-28) த/பெ திரு.விஜயன் அவருக்கு முதல் பரிசாக எல்ஈடி டிவியும், நாட்றம்பள்ளி பேரூராட்சி 6-வது வார்டை சேர்ந்த திருமதி.கஸ்தூரி (வயது-43) க/பெ திரு.பெருமாள் அவருக்கு இரண்டாம் பரிசாக மிக்ஸியும், ஆலங்காயம் ஊராட்சி ஒன்றியத்தை சேர்ந்த திரு.ஜெதிஸ்குப்தா (வயது-33) த/பெ. சுகுமார் அவருக்கு மூன்றாம் பரிசாக கிரைண்டரையும் வழங்கப்பட்டது. மேலும் கந்திலி ஊராட்சி ஒன்றியம், எலவம்பட்டி கிராமத்தை சேர்ந்த திருமதி.கலைசெல்வி க/பெ. கோவிந்தராஜ், திருப்பத்தூர் ஊராட்சி ஒன்றியம், குமரன் நகர், ஜம்மனபுதூர் கிராமத்தை சேர்ந்த செல்வன்.கணேஷ் (வயது-19) த/பெ. பெருமாள், ஜோலார்பேட்டை ஊராட்சி ஒன்றியம் காவல் நிலையம் தெரு, கோடியூரை சேர்ந்த திருமதி.பரிதாபேகம் க/பெ. ஜமில்பாஷா ஆகிய 3 நபர்களுக்கு ஆறுதல் பரிசாக டிபன் கேரியர்கள் வழங்கப்பட்டது.

அதனை தொடர்ந்து பரிசு பெற்றுக்கொண்டவர்கள் மாவட்ட வருவாய் அலுவலர் அவர்களுக்கு நன்றி தெரிவித்தார்கள். மேலும் மாவட்ட வருவாய் அலுவலர் அவர்கள் நாளை நடைபெறவுள்ள மாபெரும் கொரோனா தடுப்பூசி முகாம்களில பரிசுகளை பெற்றவர்களின் சார்பாக குறைந்தபட்சம் 100 நபர்களுக்காவது கொரோனா தடுப்பூசி செலுத்த அறிவுறை வழங்கப்பட்டது. தங்கள் பகுதியில் உள்ள கொரோனா தடுப்பூசி செலுத்தாத நபர்களை ஊக்குவித்து தடுப்பூசி செலுத்திகொள்ள வேண்டும் என பரிசுபொருட்களை பெற்றவர்களிடம் அறிவுறை வழங்கினார்கள்.

மேலும் வட்டார வளர்ச்சி அலுவலர்கள், அங்கன்வாடி பணியாளர்கள், மருத்துவர்கள், கிராம நிர்வாக அலுவலர்கள் ஆகிய அலுவலர்கள் ஒருங்கிணைந்து பணியாற்றினார்கள். இம்மாபெரும் கொரோனா தடுப்பூசி முகாம்கள் மூலம் மாவட்டத்தின் கடைகோடியில் உள்ள மக்களை சென்றடைந்துள்ளது என மாவட்ட வருவாய் அலுவலர்கள் அவர்கள் தெரிவித்தார்கள்.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர்கள் திரு.வில்சன் இராசசேகர், திரு.மோகனகுமரன், துணை இயக்குநர் சுகாதாரப்பணிகள் அவர்களின் நேர்முக உதவியாளர் திரு.சங்கரன், மாவட்ட பூச்சியியல் வல்லுநர் மரு.காமராஜ், மாவட்ட தாய்சேய் நல அலுவலர் திரு.சதீஷ்குமார் மற்றும் பலர் கலந்துகொண்டனர்.

**வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், திருப்பத்தூர் மாவட்டம்.**